செ.வெ. எண்: 718 நாள்: 03.12.2011

# செய்திக்குறிப்பு

02–12–2011 மற்றும் 3–12–2011 ஆகிய இரண்டு நாட்களில், மாவட்டபொது சுகாதார துணை இயக்குநர்கள் ஆய்வுக்கூட்டம் சென்னை எழும்பூர் சுகாதார குடும்பநல பயிற்சி மையத்தில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் **டாக்டர்.வி.எஸ்.விஜய்,** அவர்களின் தலைமையில் நடைபெற்றது. மக்கள் நல்வாழ்வுத்துறை முதன்மைச் செயலாளர் **திருமதி.கிரிஜா வைத்தியநாதன் , இ.ஆ.ப.** அவர்களும் உடனிருந்தார். மருத்துவ கருவிகள் பழுதின்றி செயல்பட ஏதுவாக ஆன்லைன் மூலம் கண்காணிக்கும் மென்பொருள் குறுந்தகட்டினை மாண்புமிகு சுகாதார அமைச்சர் அவர்கள் வெளியிட்டார்கள், பொது சுகாதாரத்துறை சார்ந்த அரசின் அறிவிப்புகள் மக்களை முழுமையாக சென்றடையவும், இருமடங்காக உயர்த்தப்பட்ட டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித்திட்டம், களஅளவிலான தடுப்பூசி திட்டம், இலவச சானிட்டரி நாப்கின்கள் வழங்கும் திட்டம், நடமாடும் மருத்துவமனை திட்டம், பிறவிக்குறைபாட்டை கண்டறிந்து சிகிச்சை அளிக்கும் திட்டம், டெலிமெடிசின் திட்டம், புதிய நகர்ப்புற கிராமப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள், கொள்ளைநோய் தடுப்புபணிகள், கொசு ஒழிப்பு பணிகள், பல் மருத்துவ சிகிச்சை நிலையங்கள் , காலியிடங்களை நிரப்புதல், போன்ற பல்வேறு அம்சங்களில் ஆய்வுக்கூட்டத்தில் மாவட்ட வாரியாக விவாதிக்கப்பட்டது. பொது சுகாதாரத்துறை இயக்குநர். மரு .இரா.தி.பொற்கைப்பாண்டியன் முக்கிய ஆய்வு முடிவுகளை மாவட்டபொது சுகாதார துணை இயக்குநர்களுக்கு எடுத்துக்கூறினார். மருத்துவத்துறை இயக்குநர்.மரு.இராஜா, தமிழ்நாடு மாநில நலவாழ்வு சங்க திட்ட ஆணையர் திரு.பங்கஜ் குமார் பன்சால் இ.ஆ.ப. ஆகியோர் ஆய்வுக்கூட்டத்தில் பங்கேற்றனர்.

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**